அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

(Peer Reviewed Journal Multidisciplinary)

ISSN: 2582-399X



காலாண்டு இதழ்
(ஜனவரி, ஏப்ரல், ஜூலை, அக்டோபர்)
ஆகிய மாதங்களில் வெளிவரும்

Vol:8 Issue :31 July 2026

கோட்டை:8 வாயில்:31 ஜூலை 2026

அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

Aran

International e Journal of Tamil Research

EDITORIAL BOARD

Founder / Editor in Chief

Dr PRIYAKRISHNAN

Publisher

MR P. JAYAKRISHNAN

Editorial Board Members

Dr V SELVAKUMAR

Professor And Head of The Department of Maritime History and Marine Archaeology Tamil University, Thanjavur, TamilNadu, India

Dr. Ravindran A/L Maraya

Head of Department & Senior Lecturer, Department of Indian Studies (DIS), Universiti Malaya, Kuala Lumpur, Malaysia.

Dr Silllalee A/L S.Kandasamy

Senior Lecturer, Department of Indian Studies, Universiti Malaya,

Dr. S. KAVITHA

School of Indian Languages and Comparative Literature,Tamil University, Thanjavur. TamilNadu, India

Dr.K.DAYANIDHI

Assistant Professor & Head i/c , Department of Vaishnavism , University of Madras, TamilNadu, India.

Copy Right @ Aran international e journal of Tamil Research/Dr. Priyakrishnan

அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

Aran

International e Journal of Tamil Research

EDITORIAL BOARD

Dr O.MUTHIAH

Professor of Tamil, The Gandhigram Rural Institute (Deemed to be University)
Gandhigram - 624 302 Dindigul District, TAMIL NADU

DR UMADEVI

Professor In Tamil, Department of Modern Indian Languages And
Literery Studies University of Delhi,Delhi.

DR JAGADEESAN.T.

Assistant Professor of Tamil, Department of Indian Languages,
Faculty of Arts, Banaras Hindu University,
Varanasi- 221005, Uttar Pradesh,India.

DR SENTHIL PRAKASH.S

Teacher – in- charge/Assistant professor (SG),Department of
Tamil, Institute of Languages, Literature& culture,
Visva – Bharathi University,Santiniketan,West
Bengal, India -731235

DR R TAMILSELVAN

Assistant professor, Aligarh Muslim University, Uttar Pradesh,India-202002

Dr SWARNAVEL ESWARAN

Associate Professor Departments of English, and Media and Information
Michigan State University. USA.

Dr (Ms.) NILANKA LIYANAGE

Senior Lecturer in Dance ,Department of Dance,Drame&Theatre Arts,
Swamy Vipulananda Institute of Aesthetic Stidies,
Eastern University Srilanka

அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

Aran

International e Journal of Tamil Research

EDITORIAL BOARD

Mrs THULSIVANTHANA UDAYASHANKAR

Senior lecturer Gr II in English, Swamy Vipulananda Institute of Aesthetic Stidies ,Eastern University, Srilanka

Dr B. DHANANJAYAN

Associate Professor, Sir Theagaraya College, Old Washermenpet, Chennai - 600 021.

Dr P.SEKAR

Assistant Professor,Department of Education,Govt.Institute of Advanced Study in Education,Saidapet,Chennai-600015.

நிறுவனர்/பதிப்பாளர்/நிர்வாக ஆசிரியர்

இதழாக்கம்

திரு ப. ஜெயகிருஷ்ணன்

முதன்மை ஆசிரியர்

முனைவர் பிரியாகிருஷ்ணன்

+917299587879

www.aranejournal.com

aranjournal@gmail.com

அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழில் வெளிவரும் ஆய்வுக்கட்டுரைகள் அனைத்தும் (Peer Review)பீர் ரிவியூ செய்யப்பட்டு பதிவு செய்யப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

தமிழ்

சங்க இலக்கியங்களில் நம்பிக்கை

Concept of Beliefs in Sangam Literature

Dr.S.Sudha Assistant Professor In Department Of Language, Nazareth College Of Arts And Science, Avadi -71)

முனைவர் சு.சுதா, உதவிப்பேராசிரியர் நாசரேத் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, ஆவடி, சென்னை - 62

Abstract

This study examines the beliefs reflected in Sangam literature and their significance in the life of the ancient Tamils. It analyzes references found in Kuruntokai, Natrinai, Ainkurunuru, Akananuru, and Mullaippattu, including omens, crow beliefs, chameleon omens, viricci (auspicious utterances), moon worship, rebirth, curses, bodily signs, nature worship, and the symbolic importance of the number seven. The study highlights how these beliefs shaped the social, cultural, and religious life of the Sangam people and demonstrates that many of these traditional beliefs continue to influence contemporary Tamil society.

Keywords: *Sangam Literature, Beliefs, Omens, Ancient Tamils, Culture, Folk Traditions.*

ஆய்வுச்சுருக்கம்

இவ்வாய்வு, சங்க இலக்கியங்களில் இடம்பெற்றுள்ள நம்பிக்கைக் கருத்துகளை ஆய்வு செய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது. குறுந்தொகை, நற்றிணை, ஐங்குறுநூறு, அகநானூறு, முல்லைப்பாட்டு போன்ற சங்க இலக்கியங்களில் இடம்பெற்றுள்ள நிமித்தம், காகம், ஓந்தி, விரிச்சிக் கேட்டல், பிறை வழிபாடு, மறுபிறப்பு, சாபம், உடலுறுப்பு இயக்கம், இயற்கை வழிபாடு மற்றும் ஏழு என்ற எண்ணின் சிறப்பு போன்ற நம்பிக்கைகள் ஆராயப்பட்டுள்ளன. இந்நம்பிக்கைகள் பழந்தமிழரின் வாழ்வியல், சமய உணர்வு, சமூக மரபுகள் மற்றும் பண்பாட்டு விழுமியங்களை வெளிப்படுத்துவதை இவ்வாய்வு எடுத்துக்காட்டுகிறது. மேலும், சங்ககால நம்பிக்கைகளில் பல இன்றைய தமிழர் வாழ்வியலிலும் தொடர்ச்சியாக நிலைத்திருப்பதை இவ்வாய்வு விளக்குகிறது.

திறவுச் சொற்கள்: சங்க இலக்கியம், நம்பிக்கை, நிமித்தம், பழந்தமிழர், வாழ்வியல், பண்பாடு, மறுபிறப்பு, இயற்கை வழிபாடு.

முன்னுரை

சங்க இலக்கியங்களில் நம்பிக்கை என்பது மனித வாழ்க்கையின் அடிப்படைப் பண்பாகச் சித்தரிக்கப்படுகிறது. அக்கால மக்களின் வாழ்வியல், இயற்கை, இறைநம்பிக்கை, நட்பு, காதல் மற்றும் சமூக உறவுகள் ஆகிய அனைத்திலும் நம்பிக்கை முக்கிய இடத்தைப் பெற்றிருந்தது. தலைவன்—தலைவி உறவில் ஒருவர்மீது ஒருவர் கொண்ட உறுதியான நம்பிக்கை, நண்பர்களிடையே காணப்படும் விசுவாசம், அரசர்மீது குடிமக்கள் வைத்திருந்த நம்பிக்கை ஆகியவை சங்கப் பாடல்களில் தெளிவாகப் பிரதிபலிக்கின்றன. மேலும், இயற்கை சக்திகளையும் தெய்வங்களையும் மதித்து வாழ்ந்த சங்ககால மக்கள், அறநெறியைப் பின்பற்றி வாழ்வதே சிறந்த வாழ்க்கை என்ற நம்பிக்கையையும் கொண்டிருந்தனர். இவ்வாறு, நம்பிக்கை என்பது தனிமனித உறவுகளை வலுப்படுத்துவதோடு மட்டுமல்லாமல், சமூக ஒற்றுமையையும் பண்பாட்டு உயர்வையும் நிலைநிறுத்திய முக்கியமான வாழ்க்கை நெறியாக சங்க இலக்கியங்கள் எடுத்துரைக்கின்றன.

நம்பிக்கைகள்

மனித வாழ்வில் நம்பிக்கைகள் முக்கியப் பங்கு வகிக்கின்றன. மனிதன் தோன்றிய பொழுதே நம்பிக்கைகள் தோற்றம் பெற்றன என்பதனை மறுக்கவும் முடிவதில்லை.

நம்பிக்கை - தோற்றம்

மனித மனத்தின் விழைவால் நம்பிக்கை தோன்றுகிறது எனலாம். தீமைகளிலிருந்து தன்னைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டுமென்ற விருப்பமும் நம்பிக்கைகளை நிலைநிறுத்துகின்றன. பொதுவாக நம்பிக்கைகளை உள உருவாக்கம் என்பர் ஏதாவது ஒரு செயலைத் தொடங்குவதற்கு முன் நல்லநாளும், பொழுதும், நள்நிமித்தமும் பார்த்துத் தொடங்குவது தமிழ் மக்களிடம் தொன்று தொட்டு இருந்து வரும் ஒரு வழக்கமாகும். குறுந்தொகையில் மக்கள் புள் நிமித்தம் பார்த்தனர் என்பதை

> “புள்ளும் ஓரோம் விரிச்சியும் நில்லாம்
> உள்ளலு முள்ளா மன்றோ தோழி” (குறு. 218)

என்ற வரிகள் மூலம் அறியமுடிகின்றது.

காகம் பற்றிய நம்பிக்கை

காகம் கரைந்தால் விருந்தினர் வருவர், எனும் நம்பிக்கை அன்று முதல் இன்றுவரை தமிழ் மக்களின் எண்ணத்தில் ஆட்சி செய்யக் காண்கிறோம். சங்க இலக்கியத்தில் இரு பாடல்களில் காக்கை நிமித்த முணர்த்தும் நிலையில் பேசப்பட்டிருக்கிறது. இதனை,

"முழுதுடன் விளைந்த வெண்ணெல் வெஞ்சோறு
ஏழு கலத்து ஏந்தினும் சிறிது, என்தோழி
பெருந்தோள் நெகிழ்த்த செல்லற்கு
விருந்து வரக்கரைந்த காக்கையது பலியே" (குறு -210)

என்ற அடிகள் உணர்த்துகின்றன.

ஐங்குறுநூற்றிலும் தலைவனுடன் உடன் போக்குச் சென்ற தலைவியின் வருகையினைத் தெரியப்படுத்தினால், பொற்கலத்தில் உணவு படைப்பதாக நற்றாய் காக்கையிடம் கூறுவதை

"பச்சூன் பெய்த பைந்தினை வல்சி
பொலம்புனை கிழத்தில் அருகு வென்மாதோ
....
அஞ்சிலோதியை வரக்கரைந்தமே" (ஐங் -391)

இறந்தோர்க்குப் பிண்டம் வைத்த பொருட்களைக் காக்கைக்குப் படைப்பதில் ஒரு தொன்மையான நம்பிக்கை அடங்கியுள்ளதாகவும் அந்நம்பிக்கையானது இறந்தவர்களுக்கு பிண்டம் கொடுகின்ற நாளில் இறந்தவர்கள் காக்கை உருவில் வருவர் என்பதே ஆகும் என்பர் டாக்டர் ராஜ் பாலிபாண்டே"(1969:255). இதனைக் குறுந்தொகையிலும் காணலாம்.

"ஏர் கலத்து ஏந்தினும் சிறிது — என்தோழி
பெருந்தோள் நெகிழ்த்த செல்லற்கு
விருந்து வரக்கரைந்த காக்கையது பலியே" (குறு-210)

என காக்கை வடிவில் இறந்தோர் வருவர் என்பதால் அதற்கு உணவிடும் பழக்கம் பண்டைய மக்களிடம் இருந்து வருவதை காக்கையது பலியே என்ற வரிகள் மூலம் இதுபோன்ற நம்பிக்கை இன்றைய தமிழர் வாழ்விலும் காணப்படுகிறது.

ஓந்தி பற்றிய நம்பிக்கை

ஓதி எனச் சங்க இலக்கியப் பாடல்கள் சுட்டும் பச்சோந்தியினை நிமித்தமல்லாத நிலையில் இரு நற்றிணைப் பாடல்கள்(நற்.92,186) சொல்லுகின்றன. நிமித்தம் உணர்த்தும் நிலையில் குறுந்தொகைப் பாடலில் சுட்டப்பட்டிருக்கின்றது. இம்மூன்று பாடல்களும் பாலைத் திணைப் பாடலாக இருப்பது கொண்டு, பாலைநில மக்கள் இதனை நிமித்தக் கூறாகக் கொண்டிருந்தமை தெளிவாக தெரியவருகின்றது. நிறம் மாறும் வியத்தகு பண்பின் அடிப்படையில் இது நிமித்தக் கூறாகக் கருதப்பட்டிருக்கலாம். ஓந்தியின் முதுகிற்குக் கரிக்கரிவாளை அள்ளூர் நன்முல்லையார் உவமை கூறுகின்றார். இதன் ஆண் இனத்தினைப் போத்து என்று கூறுவது மரபு. பாலை நிலத்தில் செல்வார் பார்க்கும், நிமித்தத்திற்குரிய பொருள்களுள் இதுவும் ஒன்று என்பதனை,

“வேதின வெரிநினோதி முதுபோத்
தாறு சென் மாக்கள் புட்கொளப் பொருந்தும்
சுரனே சென்றனர் காதல ருரனழிந்” (குறு-140)

என்ற குறுந்தொகை அடிகள் வழி அறியமுடிகிறது. “ஓந்தியை வழிப்பயணமாக செல்லும்போது வலப்புறம் கண்டால் நன்மை பயக்கும் என்பர்” (உ.வே.சா., 2000:272).

பேரூர் ஒன்றிலே திருவிழா நடக்கிறது. தலைவியும், தோழியும் திருவிழாவினைப் பார்க்க கோவிலுக்குப் புறப்பட்ட போது, பெரியோரால் கூறப்பட்ட, வாய்ச் சொற்களாகிய நிமித்தங்கள் பலவாக இருந்தன என்பதை,

“பேரூர் கொண்ட ஆர்கலி விழவிற்
செல்வாஞ் செல்வா மென்றி யன்றிவவண்
நல்லோர் நல்ல பலவாற்றில்ல” (குறு-223)

என்ற பாடல் மூலம் கோவிலுக்குச் செல்லும்முன் நிமித்தம் கேட்கும் மரபினைக்

கொண்டிருந்தனர் என்பதைக் குறுந்தொகை மூலம் அறியமுடிகிறது. யாராவது இருவர் ஒரு காரியத்தைப் பற்றிப் பேசிக் கொண்டிருக்கும் போது “இக்காரியம் நன்முறையில் நடக்கும்” என்று வீதி வழியே போகின்ற ஒருவரின் வார்த்தை காதில் கேட்டால் அதை 'விரிச்சி கேட்டல்' என்பார்கள். இதனை நாம் 'அசாரி வாக்கு' என்கிறோம் என்பார் பாலசுந்தரன்(2003:148-149).

தலைவன் வருவான் என்ற நம்பிக்கை

தலைவன் பிரிவால் வருந்தினாள் தலைவி அவளைத் தேற்றுவதற்காகவும், தலைவன் உடனே வருவானா என்பதை அறியவும் பெருமுது பெண்டிர் நாழியில் நெல்லை எடுத்துச் சென்று சுளகில் இட்டு, நீரும் பூவும் சொரிந்து 'விரிச்சி கேட்பர்' என்று பின்வரும் முல்லைப்பாட்டு குறிப்பிடுகிறது.

“நாழி கொண்ட நறுவீமுல்லை
அரும்ப விழ அலரி தூஉய்க் கைதொழுது
பெருமுது பெண்டிர் விரிச்சி நிற்ப” (முல்லை.9-11)

அந்த நேரத்தில் தாய்ப்பசுவைப் பிரிந்து வருந்திய கன்றினை நோக்கி ஆய்மகள் ஒருத்தி 'இன்னே வருகுவர் தாயார்' என்று கூறுவதைக் கண்டு பிரிந்து சென்ற தலைவன் விரைவில் திரும்பி வருவான் என்று நம்பினர். “விரிச்சி என்பது வருங்காரியத்தை விரிவாய் முன்னே தெரிவிப்பதாகும்” என்பர் சு.வித்தியானந்தன்(2012:79).

தலைவன் பொருள் ஈட்டத் தலைவியைப் பிரிந்தான் பிரிந்த தலைவன் விரைவில் திரும்ப வேண்டும் எனக் கொற்றவை வேண்டிக் கொள்வதும், காப்பு நாண் கட்டி நோன்பு இருப்பதும், சகுனம் பார்ப்பதும் (விரிச்சி கேட்டல்) மகளிர் வழக்கம் என்பதை,

“விடர்முகை அடுக்கத்து விறல் கெழு சூலிக்குக்
கடனும் பூணாம்: கைந்நூல் யாவாம்
புள்ளும் ஓராம்: விரிச்சியும் நில்லாம்
உள்ளலும் உள்ளாம் அன்றே - தோழி” (குறு-218) என்ற வரிகள் சுட்டுகின்றன.

உடலுறுப்பு இயக்கத்தில் நம்பிக்கை

சங்க இலக்கியங்களில் பெண்களின் உடலுறுப்புக்கள் இயக்கத்தை நன்னிமித்தமாகக் கருதியதைக் காணமுடிகிறது. பெண்களின் தோள்வளையல் இறுகுதல், இடக்கண் துடித்தல், அதிகாலை கனவு மற்றும் தும்மல் வருதல் ஆகியவற்றை நன்னிமித்தங்களாகச் சங்க இலக்கியங்கள் சுட்டுகின்றன. சங்க கால மகளிர் அணியும் அணிகலன்களுள் ஒன்று தோள்வளை(தோள்காப்பு) ஆகும். தோள்வளை இறுகினால் நன்னிமித்தமாகவே கருதினர். தலைவனைப் பிரிந்த தலைவிக்கு தோள்வளை இறுகுவதால், தலைவன் விரைவில் வருவான் என்ற நம்பிக்கை. இதனை நன்னிமித்தமாக கருதினர் என்பதை

"அரிவளைப் பொலிந்த தோளும் செற்றும்
வருவர் கொல்வாழி தோழி பொருவார்" (குறு-260)

என்ற பாடலடிகளால் அறியமுடிகிறது. இதனை ஐங்குநூற்றிலும் காணலாம்.

"நுண்ணோர் புருவத்த கண்ணுமாடும்
மயிர்வார் முன்கை வளையுஞ் செறூஉம்" (ஐங்-218)

எனும் பாடலடிகள் மூலம் தலைவன் வரும் அறிகுறிகளான கண்துடித்தல், வளை இறுகுதல் போன்றவை நன்னிமித்தமாக கொண்டுள்ளதனை அறியமுடிகிறது.

நெருப்பு

தலைவன் விரைவில் வரவேண்டும், இயற்கை வழிபாட்டின் ஒருகூறான நெருப்பினை சுடராக ஏற்றி தங்கள் மனைகளில் மாலை நேரத்தில் பெண்கள் வழிபட்டதை,

"...............கனங்குழை மகளிர்
நெய் பெய்து மாட்டிய சுடர்" (குறு-398)

சாபம் பற்றிய நம்பிக்கை

சாபம் வாய்மையின் தவத்தோர்க்கும், கடவுளர்க்கும் கைகூடும் ஒன்றாகக் கூறப்படுகிறது. தவத்தோர் தான் கொண்ட கொள்கைக்கு இடையூறுவரின் சபித்தலில் ஈடுபடுவர். சாபம்

பெறுபவர் சாபத்தின் பலனை அனுபவித்தே தீருவர் என்பது அந்நாளைய நம்பிக்கையாகும்.

தலைவி மீறாகக் காதலால் சபித்தல்

தலைவனை நினைத்து தலைவி ஏங்கிக் கிடந்தாள். தலைவனும் வந்தான். இரவு முழுவதும் இன்பமாகக் கழித்தாள். பொழுது புலர்ந்தமையால் சேவல் கூவிற்று. தூக்கம் கலைந்தாள். காதலனுடன் இருந்த படுக்கையை விட்டு எழுந்து வந்தாள். தங்கள் தூக்கத்தினைக் கலைத்து இடையூறு செய்ததால் சேவல் கோழியின் மீது மிகுந்த கோபம். கோழியே! நீ நாசமாய்ப் போக! உன்னைக் காட்டுப்பூனை தின்ன என்று சபித்தாள் என்பதை

"தொகு செந்நெற்றிக் கணம் கொள் சேவல்
நள்ளிருள் யாமத்து இல் எலிபார்க்கும்
பிள்ளை வெருகிற்கு அல்பு இரைஆகி
……………………..
ஏம இன் துயில் எடுப்பியோயே" (குறு-107)

என்ற குறுந்தொகைப் பாடல் மூலம் சபிக்கும் தன்மையினை அறியமுடிகிறது.

தலைவியின் காதலன் சிரித்த முகத்தோடு ஊருக்குள் வர, தலைவியின் அன்னை அன்று இரவு முழுவதும் தூங்காது காவலிருந்தாள். அவள் நன்னன் போல நரகத்திற்குப் போகட்டும் எனச் சாபம் கொடுக்கிறாள் தலைவி. இதனை

"பெண்கொலை புரிந்த நன்னன்போல
வரையா நிரையத்துச் செலீஇயரோ அன்னை
ஒருநாள், நகை முக விருந்தினன் வந்தென
பகைமுக ஊரின், துஞ்சலோ இலளே" (குறு-292)

என்ற வரிகள் மூலம் தன் செயலுக்கு இடையூறு செய்த அன்னையினைச் சபிக்கும் தன்மையினை அறியமுடிகிறது.

மேற்கூறிய செய்திகளின் மூலம் சாபம் என்பது தான் கொண்ட கொள்கைக்கு இடையூறுவரின் சபித்தலில் ஈடுபடுவர் என்பதும், உலகியல் நியதிகளை வாய்மையின் வழிபோற்றிப் பாதுகாக்கும் ஒருவகை ஆற்றல் என்பதை உணரமுடிகின்றது.

தலைவியின் பிறவி நம்பிக்கை

பிறப்பு, மறுபிறப்பு போன்ற கருத்துக்கள் அறஇலக்கியங்களில் மட்டுமின்றி சங்க இலக்கியங்களிலும் இடம்பெற்றள்ளது என்பதை பாடல்களின் வழியே அறியலாம்.

பிறவி என்றிருந்தால் இப்பிறவி மட்டுமல்லாமல் அடுத்த பிறவியிலும் என்னுடைய கணவன் நீயே ஆகுக. உன் நெஞ்சில் கலந்தொழுகும் காதலி நானே ஆகவேண்டும் என குறுந்தொகையில் தலைவி கூறுவதனைக் காணலாம்.

''இம்மை மாறி மறுமையாகினும்
நீயா இயரென் கணவன்
யானா கியர்நின் னெஞ்சுநேர்பவளே'' (குறு-49)

என்ற வரிகள் வெளிப்படுத்துகின்றன. இவற்றிலிருந்து இம்மை, மறுமை பற்றிய நம்பிக்கை அக்கால மக்களுக்கு இருந்தமையினை அறியமுடிகிறது.

தலைவனின் பிறவி நம்பிக்கை

கிடைப்பதற்கு அரிய தலைவியை இப்பிறவியில் இல்லாவிட்டலும், அடுத்த பிறவியிலாவது இவளையே காதலியாகப் பெறுவேன் உறுதி என தலைவன் தன் மனதிற்குள் கூறுவதாக அமைந்த பாடல்

''இன்றை அன்ன நட்பின் இந்நோய்
இறுமுறை என்ன ஒன்று இன்றி
மறுமை உலகத்து மண்ணுதல் பெறுமே'' (குறு-199);

என்ற பாடல் வரிகள் மூலம் மறுபிறப்பு பற்றிய நம்பிக்கை அறிவுறுத்தப்படுகிறது இதனை, நற்றிணைப் பாடலிலும் காணலாம்.

''சாதலஞ்சே னஞ்சுவல் சாவில்
பிறப்புப் பிறிதாகுவதாயின்
மறக்குவேன் கொல்லென் காதலனெனவே'' (நற்-397)

என்ற நற்றிணை பாடலடிகள் மூலம் உயிரானது இறந்து பிறக்கும் என்ற நம்பிக்கையை அறியமுடிகிறது.

முற்பிறப்பில் ஒருவர் செய்த நல்வினை தீவினைகளுக்கேற்ப இப்பிறப்பில் அவருடைய இன்பதுன்பங்கள் நிச்சயிக்கப்படுகின்றன என்ற கொள்கை இருந்துள்ளது என்பதை

"யாம்செய் தொல்வினைக் கெவன்பே துற்றனை
வருந்தல் வாழி தோழி" (நற்-88:1-2)

நற்றிணைப் பாடல்வழி அறியலாம்.

ஏழின் சிறப்பு

பழந்தமிழ் இலக்கியங்களில் ஏழு என்ற எண் மிகுதியாக வந்திருப்பதைக் காணலாம். இவ்வெண் நன்மை பயக்கும் எண்ணாகக் கருதும் வழக்கம் உலகின் பலநாடுகளிலும் வழக்கியுள்ளது. நன்மை பயக்கும் எண்களுள் ஏழு என்ற எண்ணே மிகுந்த நன்மை பயக்கும் எண்ணாக நினைக்கப்படுகிறது.

குறுந்தொகைப் பாடலில் ஏழு என்ற எண்ணிக்கை அடிப்படையிலான சொல் கொண்ட பாடல்களே அதிகமாகக் காணப்படுகின்றன. இவை ஐந்து பாடல்களில் வருகின்றன. மற்ற எண்கள் கொண்ட பாடல்கள் ஒருசில இடங்களில் மட்டுமே காணப்படுகின்றன.

ஆற்றங்கரையில் வளர்ந்துள்ள அத்திமரத்தின் கீழ் விழுந்த அத்திப்பழத்தை ஏழு; நண்டுகள் மிதிப்பதாக பரணர் குறிப்பிடுகிறார்.

இதனை

"ஆற்றய எழுந்த வெண்கோட்டதவத்து
எழு குளிறு மிதித்த ஒரு பழம் போலக்" (குறு.24)

என்ற பாடல் அடிகள் சுட்டுகின்றன.

ஏழு ஊருக்கும் பொதுவாக ஓர் ஊரில் அமைந்த கொல்லன் உலை ஊதும் துருத்தி போல் என்ற உவமையை கச்சிப்பேட்டு நன்னாகையார் எடுத்தாள்கிறார். இதனை,

"ஏழ் ஊர்ப் பொது வினைக்கு ஓர் ஊர் யாத்த
ஊலை வாங்கு மிதிதோல் போலத்" (குறு.172)

என்ற அடிகளில் உணரலாம்.

தொண்டி என்ற நகரத்தில் முற்றிவிளைந்த நெல்லின் சுடுசோற்றை ஏழு கிண்ணத்தில் ஏந்தினாலும் சிறிது என்பதை காக்கைபாடினியார்.

"கொன்னூர் துஞ்சினும், யாம் துஞ்சலமே
எம்இல் அயலது ஏழில் உம்பர்" (குறு.138)

என்ற அடிகள் தெரிவிக்கின்றன. இதிலிருந்து குன்றத்தின் பெயர் ஏழு என்ற எண்ணின் அடிப்படையில் அமைவதையும் காணமுடிகிறது. மேலும் ஏழில் என்பது ஏழிலைப்பாலை எனப்படும் மரத்தின் பெயருமாம் என்பர் புலியூர்க்கேசிகன்.

குறுந்தொகை இரண்டாம் பாடலில் (இறையனார்) ஏழனுருபு இறுதிக்கண் தொக்கி(மறைந்து) வருவதாக வ.உ.சு ஐயர் குறிப்பிடுகிறார்.

"நறியவும் உளவோ நீ அறியும் பூவே" (குறு.2)

பூவே என்பதில் ஏழாவது உருபு தொக்கி நிற்பதாக குறிப்பிடுகிறார். இவ்வாறு மேற்கண்ட குறுந்தொகைப் பாடல்களைக் கானும்போது ஏழு எண் நம்பிக்கையின் அடிப்படையில் சிறப்புப் பெற்றுள்ளதை அறியமுடிகிறது.

பிறை நம்பிக்கை வழிபாடு

பண்டைக் காலம் முதலே இயற்கையை வழிபடும் மரபு தமிழனுக்கு உண்டு. பிறையை வழிபடும் நம்பிக்கை தமிழ் மக்களிடையேயும் இருந்துள்ள நிலையைக் காட்டுகின்றது. மூன்றாம்பிறை நாளன்று பெண்கள் தலைமுடியின் நுனியைக் கத்தரித்துக் கொள்வதும், நம்பிக்கையினால் எழுந்த செயலாகும். இங்கு, பிறை வளர்ந்து முழுமதியாவதைப் போல் தங்கள் மேற்கொண்ட முயற்சி பயனளிக்கும் என்ற நம்பிக்கையே அடிப்படையாக அமையக் காணலாம்.

கன்னிப் பெண்கள் பிறையினை வழிபாடு செய்தனர் என்பதையும் பாடல்கள் வழி அறியலாம்.

"தொழுது காண் பிறையிற் றோன்றி யாநுமக்

கரிய மாகிய காலைப்

பெரிய நோன்றனிர் நோகோ யானே" (குறு-178)

இக்கருத்தினை ஒட்டியே அகநானூறும் பிறை வழிபாட்டைச் சுட்டுகிறது,

"ஒள்ளிழை மகளிர் உயிர்பிறை தொழூஉம்

புல்லென் மாலை" (அக-239)

உடைந்து வளைந்த துண்டானது எவ்வாறு காட்சியளிக்குமோ அவ்வாறு பிறை காட்சியளிப்பதாகவும், மகளிர் பலர் பிறையினைத் தொழுவதாகவும் குறுந்தொகை காட்டுகிறது. பிரிந்த தலைவன் தம்மை மறவாமல் திரும்பி வருவதற்கு மகளிர் பிறையினைத் தொழுதனர் என்பதை,

"வளையுடைந்த தனைய தாகிப்பலர் தொழச்

செவ்வாய் வானத்தையெனத் தோன்றி

இன்னம் பிறந்தன்று பிறையே யன்னோ

மறந்தனர் கொல்லோ தாமேகளிறுதன்" (குறு-307)

என்ற பாடலடிகள் புலப்படுகின்றன.

விரிச்சிக் கேட்டல்

தலைவன் பிரிவால் வருந்தினாள் தலைவி அவளைத் தேற்றுவதற்காகவும், தலைவன் உடனே வருவானா என்பதை அறியவும் பெருமுது பெண்டிர் நாழியில் நெல்லை எடுத்துச் சென்று சுளகில் இட்டு, நீரும் பூவும் சொரிந்து 'விரிச்சி கேட்பர்' என்று பின்வரும் முல்லைப்பாட்டு குறிப்பிடுகிறது.

"நாழி கொண்ட நறுவீமுல்லை

அரும்ப விழ அலரி தூஉய்க கைதொழுது

பெருமுது பெண்டிர் விரிச்சி நிற்ப" (முல்.9-11)

என்ற முல்லைப்பாட்டு வழியாகவும்.

தலைவன்; பொருள் ஈட்டத் தலைவியைப் பிரிந்தான் பிரிந்த தலைவன் விரைவில் திரும்ப வேண்டும் எனக் கொற்றவை வேண்டிக் கொள்வதும், காப்பு நாண் கட்டி நோன்பு இருப்பதும் மகளிர் வழக்கம் என்பதை,

"விடர்முகை அடுக்கத்து விறல் கெழு சூலிக்குக்
கடனும் பூணாம்: கைந்நூல் யாவாம்
புள்ளும் ஓராம்;;;: விரிச்சியும் நில்லாம்
உள்ளலும் உள்ளாம் அன்றே — தோழி" (குறு-218)

என்ற வரிகள் சுட்டுகின்றன. புலவர் கொற்றன், தலைவன் விரைவில் வரவேண்டும் என்பதற்காக பெருமுதுமக்கள் விரிச்சி கேட்டனர் என்பதைத் தலைவி மூலம் பழந்தமிழர் நம்பிக்கையினை இலக்கியங்கள் வழி அறியலாம்.

தொகுப்புரை

- தீமைகளிலிருந்து தன்னைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டும் என்ற விருப்பமே நம்பிக்கைகளை நிலைநிறுத்துகின்றன. பொதுவாக நம்பிக்கைகளை உளஉருவாக்கம் எனலாம்.

- ஒரு செயல் தொடங்கும்போது அச்செயல் நல்லவையாக முடியவேண்டும் என்றும் எவ்வித தீங்கும் வருதல் கூடாது என்பதற்காக புள் நிமித்தம் மற்றும் பறவைகளின் ஒலியினையம் கொண்டு நிமித்தம் பார்த்தனர் என்ற செய்தி அறியலாகிறது.

- ஒந்தியின் குரல் நன்னிமித்தமாகக் குறுந்தொகையில் கூறப்பட்டுள்ளது. ஒந்தியை பாலை வழிப் பயணம் செல்வோர் வலப்புறமாக கண்டால் நன்மை பயக்கும் என்ற செய்தியினை அறியமுடிகிறது. தலைவன் விரைவில் வரவேண்டும் என்பதற்காக பெருமுது மக்கள் விரிச்சி கேட்டனர் என்றும், அக்காலத்தில் கோவிலுக்கு மகளிர் செல்லும் முன் நிமித்தம் கேட்கும் மரபினைக் கொண்டிருந்தனர் என்பதனை அறியமுடிகிறது.

- தான் கொண்ட கொள்கைக்கு இடையுறுவரின் சபித்தலில் ஈடுபடுவர் என்பதனை

தலைவியானவள் தலைவனுடன் உண்டான தூக்கத்தினை சேவல் கூவி எழுப்பியதால், அதனை சபிப்பதனையும் தாயினை சபிக்கும் தனமமையும் அறியமுடிகிறது.

- வேறியாட்டு என்பதை பழந்தமிழரின் தனித்த வழிபாடாகும். வழிபாடு செய்பவர்களின் வாயிலாக இறைவன் வெளிப்படுவான் என்ற நம்பிக்கையினையும், கன்னிப்பெண்கள் தாங்கள் நினைத்த காரியம் வெற்றிப்பெற தைந்நீராடும் வழக்கத்தினைக் கொண்டிருந்தனர் என்றும், பழந்தமிழ் மக்கள் இயற்கையின் கூறுகளான சுடரினை ஏற்றி வழிபட்டனர் என்பதையும், மரங்களில் தெய்வம் இருப்பதாகவும் கருதி வழிபட்டனர் என்பதை அறிய முடிகிறது.
- ஏழு என்ற எண்ணின் சிறப்புக்களைப் பற்றிய கருத்துக்களையும் அறியமுடிந்தது.

முடிவுரை

சங்க இலக்கியங்கள் மனித வாழ்வில் நம்பிக்கையின் முக்கியத்துவத்தை ஆழமாக எடுத்துரைக்கின்றன. அன்பு, நட்பு, அறம், வீர உணர்வு மற்றும் சமூக ஒற்றுமை ஆகியவற்றின் அடித்தளமாக நம்பிக்கை விளங்குகிறது என்பதை சங்கப் பாடல்கள் உணர்த்துகின்றன. மனித உறவுகளை நிலைநிறுத்தவும், நல்லொழுக்கமிக்க சமுதாயத்தை உருவாக்கவும் நம்பிக்கை இன்றியமையாத பண்பாகும். எனவே, சங்க இலக்கியங்களில் கூறப்படும் நம்பிக்கைக் கருத்துகள் இன்றைய சமூக வாழ்விற்கும் பொருந்தக்கூடிய உயரிய வாழ்க்கை நெறிகளாக விளங்குகின்றன.

Bibliography

1. *U. V. Swaminatha Iyer. Kuruntokai: Text and Commentary. Chennai: U. V. Swaminatha Iyer Library.*
2. *Puliyur Kesigan (Ed.). Kuruntokai: Commentary. Chennai: Pari Nilayam.*
3. *Natrinai: Text and Commentary. Thanjavur: Tamil University.*
4. *Ainkurunuru: Text and Commentary. Thanjavur: Tamil University.*
5. *Akananuru: Text and Commentary. Thanjavur: Tamil University.*
6. *Mullaippattu: Text and Commentary. Thanjavur: Tamil University.*
7. *Varadarasan, Mu. History of Tamil Literature. New Delhi: Sahitya Akademi.*

8. Vithiananthan, S. *Tamilar Saalbu (The Heritage of the Tamils)*. Chennai: Pari Nilayam.

9. Balasundaran. *Beliefs and Customs of the Tamils*. Chennai.

10. Pandey, Raj Bali. *Hindu Saṁskāras: A Socio-Religious Study of the Hindu Sacraments*. New Delhi: Motilal Banarsidass, 1969.

11. Tamilannal. *Comparative Study of Sangam Literature*. Madurai: Meenakshi Book House.

12. Tamil University. *Collected Works of Sangam Literature*. Thanjavur: Tamil University.

துணைநூற்பட்டியல்

1. உ.வே. சாமிநாதையர் (உ.வே.சா.). **குறுந்தொகை — மூலமும் உரையும்**. சென்னை: உ.வே. சாமிநாதையர் நூல் நிலையம்.

2. புலியூர்க் கேசிகன் (உரை.). **குறுந்தொகை — தெளிவுரை**. சென்னை: பாரி நிலையம்.

3. **நற்றிணை — மூலமும் உரையும்**. சென்னை: தமிழ்ப் பல்கலைக்கழகம்.

4. **ஐங்குறுநூறு — மூலமும் உரையும்**. சென்னை: தமிழ்ப் பல்கலைக்கழகம்.

5. **அகநானூறு — மூலமும் உரையும்**. சென்னை: தமிழ்ப் பல்கலைக்கழகம்.

6. **முல்லைப்பாட்டு — மூலமும் உரையும்**. சென்னை: தமிழ்ப் பல்கலைக்கழகம்.

7. மு. வரதராசன். **தமிழ் இலக்கிய வரலாறு**. சென்னை: சாகித்ய அகாதெமி.

8. சு. வித்தியானந்தன். **தமிழர் சால்பு**. சென்னை.

9. பாலசுந்தரன். **தமிழர் நம்பிக்கைகளும் பழக்கவழக்கங்களும்**. சென்னை.

10. ராஜ் பாலி பாண்டே. **இந்து சடங்குகள் (Hindu Saṁskāras)**. (தமிழில் மேற்கோளாகப் பயன்படுத்தப்பட்டது).

11. தமிழண்ணல். **சங்க இலக்கிய ஒப்பீடு**. மதுரை: மீனாட்சி புத்தக நிலையம்.

12. தமிழ்ப் பல்கலைக்கழகம். **சங்க இலக்கியத் தொகுப்புகள்**. தஞ்சாவூர்.

அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

அறிவிப்பு / Announcement

அன்பான தமிழ்ச் சொந்தங்களே

வணக்கம்.

வரும் 2026, அக்டோபர் மாதம் வெளிவரும் அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழுக்கான ஆய்வுக் கட்டுரைகள் ஆய்வாளர்களிடமிருந்து வரவேற்கப்படுகின்றன.

கட்டுரை வந்து சேர வேண்டிய கடைசி நாள் - அக்டோபர் 10. அதற்கு பின் வரும் கட்டுரைகள் அக்டோபர் இதழில் இடம்பெறாது என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

www.aranejournal.com